DIBSS

For Long-Life Rice

# செயல்நிறைவேற்று அறிக்கை

# 2014

# உணவு ஆணையாளர் திணைக்களம்

இல: 330,
யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

தொலைபேசி:*011-2421211*
தொலைநகல்:*011-2434291*

# முகவுரை...........

2014 ஆம் ஆண்டுக்கான முகவுரையினை ஆரம்பிப்பதற்கு முன்னதாக 2013 ஆம் ஆண்டுக்கான செயல்நிறைவேற்று அறிக்கையில் சுட்டிக்காட்டியள்ளதை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும். “பூமியானது, அறுவடையில் செழித்து விளங்கும் நெல் வயல்கள் உள்ளடங்கலாக பயிற்செய்கையினை மேற்கொள்வதற்குத் தேவையான மழை வீழ்ச்சி மற்றும் சூரிய ஒளி ஆகியவற்றினை தாராளமாகவே பெறுகின்றது. எவ்வாறாயினும், பயிற்செய்கையானது அடிக்கடி ஏற்படும் சூறாவளி, புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை வானிலைமைகளினால் மோசமாகப் பாதிப்புக்குள்ளாகின்றது.” அதுமட்டுமல்லாமல், நீண்டகாலமாக எதிர்நோக்கப்பட்டுவரும் அச்சுறுத்தல்களையும் நான் இங்கு குறிப்பிட்டுள்ளேன். மேலும், அதற்கு ஈடு கொடுக்கும் வகையில், திணைக்களமானது அதன் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பின்புலத்தினை தயார் செய்யும் பொருட்டு தற்போதைய உபாய திட்டமிடல்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை நெறிமுறைப்படுத்தியுள்ளது. அதன் பிரதான நோக்கம், பாதகமான வானிலையின் காரணமாக நாட்டின் நெற் பயிற்செய்கையானது மோசமாகப் பாதிக்கப்படுகின்றபோது உறுதியான உதவுகையினை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் அரசைப் பாதுகாப்பு இருப்பு மட்டம் குறித்து இந்த அறிக்கையினை வாசிக்கும் புத்திஜீவிகளின் கண்களைத் திறப்பதேயாகும்.

தரமான பாதுகாப்பு அரிசி இருப்பு மட்டத்தினை பேணுவதற்கான தேவை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தமையால், விஞ்ஞான முறையிலான களஞ்சியப்படுத்தல் முறைமையினை பின்பற்றுவதற்கு திணைக்களத்தின் சேதமடைந்த களஞ்சியங்களை புதுப்பிப்பதற்குத் தேவையான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுவதற்குத் தேவையான அரிசியினைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறாமையினால் திணைக்களத்தனால் அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை பேணும் அதன் தொழிற்பாட்டினை முறையாக மேற்கொள்ள முடியவில்லை.

அரிசி பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை உச்ச அளவில் பேணுவதற்கான தடையாக அமைந்திருந்த 2014 இல் இலங்கையில் ஏற்பட்ட சுற்றாடல் சீரழிவு குறித்து ஒவ்வொருவரும் நன்றாக அறிவீர்கள். கடும் வரட்சியின் காரணமாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் முற்று முழுதாக அழிவடைந்தமையின் காரணமாக உள்நாட்டு அரிசி சந்தையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து, உள்நாட்டு அரிசியின் சந்தைய விலையானது

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட உத்தரவாத விலையினை விஞ்சியதுடன் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரிசியின் விலை மீளாய்வானது மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு நிலுவுகின்ற வேளைகளில், வெளிநாட்டு சந்தையிலிருந்து அரிசியானது இறக்குமதி செய்யப்பட்டு உள்நாட்டுச் சந்தைக்கு கொண்டு வரப்படுவதுடன் திணைக்களமானது கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 35,000 மெ.தொன் அரிசிக்கான களஞ்சியப்படுத்தல் வசதிகளை வழங்கியுள்ளது. அவற்றுள் 5000 மெ.தொன் கொள்ளளவினைக் கொண்ட திணைக்களத்தினால் பேணப்பட்டு வரும் இரண்டு விஞ்ஞான ரீதியிலான களஞ்சியங்களை கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு அவற்றினால் இறக்குமதி செய்யப்படும் அரிசிகளை களஞ்சியப்படுத்துவதற்காக வழங்கியுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் இறக்குமதி செய்யப்படும் அரிசி இருப்பானது உணவுத் திணைக்களத்தினால் களஞ்சியப்படுத்தப்பட்டு வந்துள்ளது. விஞ்ஞான ரீதியான நியமங்களைக் கொண்ட களஞ்சியங்கள் மற்றும் சாதாரண களஞ்சியங்களில் பாதுகாப்பாக பேணிப் பாதுக்காக்கப்பட்டு வந்துள்ளதுடன் விஞ்ஞான ரீதியான களஞ்சியங்களின் யதார்த்த நிலையினை ஊக்குவிப்பதற்கான பின்னூட்டியாகவும் அமைந்திருந்தது. மேலும் குறித்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தினால் அடையப் பெற்ற மிகப் பெரிய சாதனையுமாகும்.

அத்துடன், திணைக்களமானது அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அரச மற்றும் தனியார் துறைக்கு பயன்பாடற்று இருக்கும் அதன் பண்டகசாலைகளை வாடகைக்கு வழங்குவதனூடாகவும் பிரிமா கம்பனியின் ஊழியர்களுக்கும் சொந்த வீடுகளைக் கொண்டிருக்காத அரச ஊழியர்களுக்கும் திருகோணமலை தானியகமவிலுள்ள வீடுகளை வாடகைக்கு வழங்குவதனூடாகவும் அரச வருமானத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

மேலும், 2014 இல், முன்னைய ஆண்டில் வாடகைக்கு எடுத்தவர்களினால் 34 வீடுகள் உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதானது அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் அவற்றினை திணைக்களத்திற்கு மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளினை முன்னெடுத்து அவற்றினை விண்ணப்பித்த ஏனையோருக்கு எழுத்து மூலமான உடன்படிக்கையில் வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அவற்றினை திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திணைக்களத்தினை வெற்றிகரமாக தொழிற்படுவதற்கு பல ஊழியர்கள் அயராது உழைத்துள்ள அதேவேளையில் திணைக்களத்தின் நற்பெயருக்கு களங்கம் எற்படுத்தும் வகையிலும் திணைக்களத்தின வெற்றியினைத் தடுக்கும் நோக்குடன்

வன்மத்துடனும் சில ஊழியர்கள் பணியாற்றியுள்ளதனையும் அவதானிக்க முடிந்துள்ளது. அத்தகைய வன்மச் செயற்பாடுகளினால் பின்னடைவினை எதிர்கொள்வதிலிருந்து திணைக்களத்தினைப் பாதுகாத்து வெற்றிகரமாகத் தொழிற்படுவதற்கான இணக்கப்பாடுகளை வழங்கியுதவிய பதவியினருக்கு எனது நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திணைக்களத்தின் களஞ்சியங்கள் நெல்லினால் நிரம்பி வழிவதற்கான எனது கனவு நனவாகுவதற்கும் இலங்கையர்களுக்கான அரிசி வழங்கலினை நிறைவாக மேற்கொள்ளும் அதேவேளையில் உணவுப் பாதுகாப்பு யதார்த்தத்தினை ஊக்குவிப்பதற்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



என்.நிமல்கா டயஸ்
உணவு ஆணையாளர்
2015 மார்ச் மாதம் 30 ஆம் திகதி

யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02,
உணவு ஆணையாளர் திணைக்களம்

## பொருளடக்கம்

1. உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நோக்கும் செயற்பணியும்…………..42
2. மேம்படுத்தப்பட்ட அரிசி களஞ்சியப்படுத்தலுக்கான DISBSS கருத்திட்டம்.....43 - 45
3. உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள் ……….46
4. உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு…………………47
5.நிருவாக கட்டமைப்பும் பதவியினரும்…………………………..................................48 - 51
6. கணக்காய்வும் வினைத்திறன் நடவடிக்கைகளும் ……………………………........52
7. நீதிமன்ற நடவடிக்கைகள் ……………………………………………..........................53
8. திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களும் வீடுகளும் ………...............54 - 62
9. கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான பொழிப்பு …………..................................63 - 64
10. ஆதனங்களும் சொத்துக்களும் ……………………………………........................65
11. வருமானங்களும் அறவீடுகளும் ………………………………..........................66
12. நிதி அறிக்கைகள் ……………………………………………….......................................67- 69
13. தொழிற்பாடுகளும் முன்னேற்றமும் ………………………………….........................70

# எம்மைப் பற்றி……..

## ■ நோக்கு

“தரமானஆரோக்கியமான
அத்தியாவசிய உணவுப்
பொருட்களை தட்டுப்பாடின்றி
வழங்குவதற்கு உத்தரவாதமளித்தல்”

## ■ செயற்பணி

“உணவுத் தானியங்களை சந்தையில்
இலகுவாக கொள்வனவு செய்வதற்கு
நுகர்வோருக்குவாய்ப்புக்களைப் பெற்றுக்
கொடுத்தல் மற்றும் நுகர்வோர் கொள்வனவு
செய்யக் கூடிய விலையில் அவற்றினை
வழங்குவதற்கு உத்தரவாதமளித்தல் மற்றும்
உணவுத் திணைக்களத்தின் கீழ்
தொழிற்படுகின்ற நிறுவனங்களின்
வளங்களை வினைத்திறனுடன்
பயன்படுத்துதல் மற்றும்
உத்தியோகத்தர்களுடன் நெருங்கிய
தொடர்பினைப் பேணுதனூடாக
திணைக்களத்தின் இலக்கினை அடைதல்”

## (02). மேம்படுத்தப்பட்ட அரிசியினை களஞ்சியப்படுத்துவதற்கான DIBSS கருத்திட்டம்

பின்வரும் சூழ்நிலைகளின் கீழ், திணக்களத்தின் பிரதான தொழிற்பாடாக விளங்குகின்ற தற்போது பேணப்பட்டு வருகின்ற பாதுகாப்பு இருப்பு மட்டமானது காலத்திற்கு காலம் மாற்றத்திற்குட்படக்கூடியது.

- கொழும்பு சார்க் மாநாட்டின்படி சார்க் நாடுகளின் நுகர்வுக்காக 8000 மெ.தொ. பாதுகாப்பு அரிசி இருப்பு மட்டத்தினைப் பேணுதல்.
- 2008.08.27 ஆம் திகதிய அமைச்சரவை நிரூபத்தின்படி அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை 100,000 மெ.தொன்னில் பேணுதல்.

அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுதலின் பிரதான நோக்கங்கள், எதிர்பாராத இயற்கைப் பேரிடர்களின் போது தேவைப்படும் அரிசியினை வழங்குதல், சந்தையில் அரிசி வழங்கலில் தட்டுப்பாடு நிலவும் போது ஏற்படும் விலை அதிகரிப்பினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினைப் பேணுவதனூடாக சந்தையில் நிலையான தன்மையினைப் பேணுதல். இந்த இலக்கினை அடைவதற்காக நாடு பூராகவும் 250,000 மெ.தொன் கொள்ளவில் 114 திணைக்கள களஞ்சியங்கள் உள்ளன.

அவ்வாறு களஞ்சியப்படுத்தப்படும் அரிசிப் பாதுகாப்பு இருப்பின் காலப்பகுதியினை தீர்மானிக்க முடியாதுள்ளதுடன் அது மூன்று மாதத்திற்கு மேற்பட்டதாகவும் ஒரு வருடத்திற்குட்பட்டதாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும், இலங்கை போன்ற வெப்ப வலய நாடுகளில் கடும் பருவ மழைகாலப்பகுதியில் ஈரப்பதன் உயர்வாகவும் வெப்ப காலங்களில் வெப்ப நிலையானது உயர்வாகவும் காணப்படுகின்றது. இத்தகைய நிலைமையானது நுண்கிருமிகளும் பூச்சிகளும் பெருகுவதற்கான காரணியாக அமைகின்றது. இது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தானியங்களைப் பெரிதும் பாதிக்கும். இந்நிலைமைகளின் கீழ் பங்கசுத் தாக்கத்துள்ளாகும் அரிசியானது பழுதடைவதுடன் அத்தகைய அரிசியானது மனித நுகர்வுக்குப் உகந்ததாக இருக்காது. திணைக்களமானது, இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் அரிசிப் பாதுகாப்பு இருப்புக்களின் பேணுதல் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவது அவதானிக்கப்பட்டது.

அதற்கிணங்க, பூச்சிகள், பங்கசு நோய்களின் தாக்கமின்றி இரசாயனப் பதார்த்தங்களை சேர்க்காமல் ஒரு வருடத்திற்கு அரிசியினைப் பேணிப் பாதுகாப்பதற்கான முறையொன்றினை அங்கீகரிக்கும் பொருட்டு இந்தியா போன்ற நாடுகளினால் நடாத்தப்படுகின்ற முறைகள் தொடர்பில் குறித்த துறையிலுள்ள புத்திஜீவிகளினால் நடாத்தப்படுகின்ற ஆய்வின்படி, நீண்டகாலத்திற்கு அரிசியினைப் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக வெப்பநிலை மற்றும் ஈரப்பதனை மாற்றீடு செய்வதன் மூலம் பின்வரும் முறைகளில் பேணப்பட முடியுமென அவதானிக்கப்பட்டுள்ளது.

1) இயந்திரவியல் காற்றோட்ட முறை

2) இயற்கையான காற்றோட்ட முறை.

வெயாங்கொடையிலுள்ள களஞ்சியமானது, பண்டகசாலையினை திருத்தும் பொருட்டு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடனான அறிவுறுத்தல்களின் கீழ் நிதி அமைச்சின் செயலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தினூடாக வழங்கப்பட்ட ஏற்பாடுகளினைப் பயன்படுத்தி ஆராய்ச்சி மட்டத்தில் மேற்படி இரண்டு முறைகளின் மாதிரி களஞ்சியத்திலுள்ளவாறு 2012 இல் புதுப்பிக்கப்பட்டது.

**இயந்திரவியல் காற்றோட்ட முறை**

குளிரூட்டல் முறைமை மற்றும் வெப்பநிலை கட்டுப்படுத்தலினை நிருமாணிப்பதன் மூலம் பூச்சிகள் மற்றும் பங்கசுக்களின் வளர்ச்சிக்குத் தேவைப்படுகின்ற வெப்பநிலை மற்றும் ஈரப்பதனை பேணுவதற்குத் தேவையான வெப்பநிலை மற்றும் ஈரப்பதனை கட்டுப்படுத்துதல்.

**இயற்கைக் காற்றோட்ட முறைமை**

இந்த முறைமையானது காற்றினை வெளியகற்றும் மின்விசிறிகளைக் கொண்டு வெளியேயுள்ள நிலைமையினை களஞ்சியத்தினுள் பிறப்பிக்கப்பட்ட வெப்பக்காற்றினைப் பேணுவதன் மூலமும் வெளியேயுள்ள சூழ்நிலையிலுள்ள குளிர்ந்த காற்றினை உள்வாங்குவதன் மூலமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அரிசியானது 2012 ஒக்டோபரில் இந்த முறையினைப் பின்பற்றி நவீனமயப்படுத்தப்பட்ட களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் அதற்காக விசேடமான இருப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வைக்கோல் முறைமையானது ஒவ்வொரு அரிசிச் சாக்கினுள்ளும் காற்றோட்டம் முறையாக வழங்கும் வகையிலும் குறைந்தளவிலான இரசாயனப் பயன்பாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. 661.5 மெ.தொன் அத்தகைய களஞ்சியப்படுத்தப்பட்ட அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டமானது 2013 ஒக்டோபர் வரையில் தரமானதாக இருந்துள்ளதுடன் விஞ்ஞான முறையில் தீர்மானிக்கப்பட்ட ஆராய்ச்சி மட்டத்தினை அடைய முடிந்துள்ளது. இது திணைக்களத்தின் வெற்றியாக அமைவதுடன் தரமான அரிசிப் பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை வழங்குவதற்கான சாத்தியப்பாட்டினையும் வழங்குகின்றது.

அதற்கிணங்க, இந்த ஆராய்ச்சியினூடாக திணைக்களமானது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களினை அடையக் கூடியதாக இருக்கும்.

1. அரிசியினை மட்டும் நியம தரங்களுடன் களஞ்சியப்படுத்துதல்
2. குறித்த ஆண்டுகாலப்பகுதியில் பாதுகாப்பு அரிசி இருப்பினை பூச்சிகள் மற்றும் பங்கசு தாக்கமின்றி பேணிப் பாதுகாத்தல்
3. அரிசி இருப்பினைப் பேணுவதில் பிரயோகிக்கப்படும் இரசாயன பயன்பாட்டினைக் குறைத்தல்
4. சேதம் மற்றும் கழிவுகளைக் குறைத்தல்

5. அரிசியினை சுத்தமானதாகவும் சுகாதாரமானதாகவும் பேணுதல்

6. சந்தைக்கு தரமான அரிசியினை விடுவிப்பதனாடாக இரசாயனத் தன்மையற்ற தரமாதன அரிசியினை சந்தைக்கு வழங்குவதில் பங்களிப்புச் செய்தல்

7. சிறியளவிலான ஆலை உரிமையாளர்களிடமிருந்தான உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கும் களஞ்சியப்படுத்துவதற்குமான அரச பங்களிப்பினை வழங்குதல்

8. தரமான அரிசியினை ஏற்றுமதி செய்தல்

ஆராய்ச்சி மட்டத்தில் விஞ்ஞான முறையிலான களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்துகின்ற அரிசி இருப்பானது டிசம்பர் 2013 டிசம்பரில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 2014 மார்ச் இறுதியளவில் முடிவடைந்துள்ளது.

விஞ்ஞான முறையிலான களஞ்சியப்படுத்தலினை வெற்றிகரமாக முன்னெடுத்தன் காரணமாக ரூபா.3,337,589.00 தேறிய இலாபமாக ஈட்டப்பட்டதுடன் 2014 இல் திணைக்களத்தினால் ஈட்டப் பெற்ற மிகப் பெரிய சாதனையாகும்.

## (03). உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள்

**01. பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய கூட்டமைப்பின்(SAARC) கொழும்பு 16 ஆவது மாநாட்டின்படி விசேட அரிசிப் பாதுகாப்பு இருப்பினைப் பேணுதல்**

தென்னாசிய பிராந்தியத்தில் அவசரகால மற்றும் பேரிடர் காலப்பகுதியில் பயன்படுத்தவென 8000 மெ.தொ அரிசியினை இலங்கை பேணுதல் வேண்டுமென மேற்குறித்த நிறுவனத்தின் 16 ஆவது மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

**02.2008/08/27 ஆம் திகதிய அமைச்சரவை தீரமானத்தின் படி, நாடு பூராகவுமுள்ள உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைகளில் பாதுகாப்பு அரிசி இருப்பாக 100,000 மெ.தொ. இருப்பினைப் பேணுதல்**

2008/08/27 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி, உணவு திணைக்களமானது அவசர நிலைமைகளின் போது பயன்படுத்துவதற்காக 100,000 மெ.தொ. அரிசி இருப்பினைப் பேணும் வகையில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

**03. சந்தையில் அரிசியின் கிடைப்பனவினை உறுதி செய்தல்**

சந்தையில் அரிசித் தட்டுப்பாடு காரணமாக ஏற்படும் அரிசி விலைத்தளம்பலினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சந்தைக்குத் தேவையானபோது அரிசி இருப்பினை விடுவிப்பதன் மூலம் நுகர்வோருக்கு அரசியினைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பினை எஏற்படுத்திக் கொடுத்தல்.


**04. திணைக்கள மூலவளங்களினை முகாமை செய்வதற்காக அக்கறை தாரர்களுடன் (Stake holders)வினைத்திறன் வாய்ந்த ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல்**

பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளின் அடிப்படையில் வினைத்திறனுடன் அவற்றினைப் பயன்படுத்தும் பொருட்டு மிகையாகவுள்ள களஞ்சியசாலைகள் மற்றும் வீடுகளை வாடகைக்கு வழங்குவதன் மூலம் அரச வருமானத்திற்கு பங்களிப்பு வழங்குதல்.

**05. பூச்சிகளற்ற உணவுத் தானிய சூழலினை ஏற்படுத்துதல்**

உயர் தரத்தில் தானியங்களை பூச்சிகளற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தி வைப்பதனூடாக நுகர்வோருக்கு உயர் தரத்திலான தானியங்களை வழங்குதல்.

## (04). நிருவாக கட்டமைப்பு



# (05). நிருவாக கட்டமைப்பும் பதவியினரும்

## ■ நிருவாக கட்டமைப்பு:

உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிருவாக மற்றும் பேணுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் அனைத்து கணக்குகள் தொடர்பான நடவடிக்கைகளும் கணக்காளரினால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திருகோணமலை தானியகமவிலுள்ள 366 வீடுகள் திருகோணமலையிலுள்ள பொறுப்பதிகாரியினால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. வெயாங்கொடை களஞ்சியாசாலைத் தொகுதியானது களஞ்சியப் பொறுபதிகாரியினால் நிருவகிக்கப்படுகின்றது.

திணைக்களத்தின் சட்டப் பிரிவானது அமைச்சின் ஆலோசகரினால் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளது.


2014 டிசம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர்களான 225 பேரில் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 1, 11 மற்றும் 111 இனைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட 82 பேரில் 30 ஊழியர்களும் திணைக்கள ஊழியர்களின் பல்வேறு வகுதிகளையும் சேர்ந்த 81 பேரில் 51 பேரும் உள்ளடங்கலாக 114 ஊழியர்கள் உணவு திணைக்களத்தில் தற்போது சேவையாற்றி வருகின்றனர்.

2014.01.01 ஆம் திகதியிலுள்ளவாறான நிலைமையின்படி, மொத்த ஊழியர்களில் 6% மானோர் குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஓய்வு பெற்றுள்ளனர். முகாமைத்துவ உதவியாளர் சேவையினைச் சேர்ந்த 03 அலுவலர்களும் அலுவலக உதவியாளர் சேவையினைச் சேர்ந்த 05 பேரும் புதிதாக சாரதிகள் 02 பேரும் திணைக்களத்திற்கு புதிதாக கிடைக்கப்பெற்றுள்ளனர்.

■ **2014 ஆம் ஆண்டுக்கான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பதவியணி**

| | **பதவிப் பெயர்** | **அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை** | **2014.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறான பதவியணி** |
|---|---|---|---|
| **01** | உணவு ஆணையாளர் | 01 | 01 |
| **02** | பிரதி உணவு ஆணையாளர்/ உதவி உணவு ஆணையாளர் | 02 | 01 |
| **03** | கணக்காளர் | 02 | 01 |
| **04** | நிருவாக உத்தியோகத்தர் | 01 | - |
| **05** | மொழி பெயர்ப்பாளர் | 01 | - |
| **06** | தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் | 01 | - |
| **07** | தானிய அளவையாளர் | 01 | - |
| **08** | வேலைப் பரிசோதகர் | 01 | 01 |
| **09** | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | - |
| **10** | அரச முகாமைத்துவ உதவியாளர் | 82 | 30 |
| **11** | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 22 | 07 |
| **12** | சுரங்க மேடை சேவையாளர்கள் | 08 | 08 |
| **13** | சாரதிகள் | 10 | 08 |
| **14** | அலுவலக உதவியாளர் சேவை | 22 | 14 |
| **15** | புகையூட்டுவோர் | 26 | 14 |
| **16** | சுத்திகரிப்பாளர்கள் | 02 | 11 |
| **17** | சுரங்க மேடை தொழிலாளர்கள் | 01 | 01 |
| **18** | காவலாளிகள் | 17 | 17 |
| **19** | களஞ்சிய தொழிலாளர்கள் | 24 | - |
| **மொத்தம்** | | **225** | **114** |

- **2014 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையும் சேவையாற்றும் ஊழியர்களும்**



## I. புதிய நியமனங்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | 03 |
| II. | அலுவலக உதவியாளர் சேவை | 05 |
| III. | சாரதிகள் | 02 |

## II. புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோர்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | பாதுப்பு காவலாளிகள் | 02 |

## III. ஓய்வு பெற்றோர்கள்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | 03 |
| II. | புகையூட்டுனர்கள்/இயந்திர இயக்குனர்கள் | 02 |
| III. | வாகன உதவியாளர்கள் | 01 |
| IV | காவலாளிகள் | 01 |

## IV. இட மாற்றலாகி சென்றோர்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | 07 |
| II | சாரதிகள் | 01 |

## V. இட மாற்றலாகி வருகை தந்தோர்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 01 |
| II | சாரதிகள் | 01 |

## VI. திணைக்கள சேவைக்கு இணைக்கப்பட்டோர்

| # | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| I. | சுரங்க மேடை உத்தியோகத்தர்கள் | 02 |
| II | சாரதிகள் | 01 |

## (06). கணக்காய்வும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும்

- **கணக்காய்வு**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமானது உணவுத் திணைக்களத்தில் கணக்காய்வுப் பிரிவொன்றினை தாபித்துள்ளது.முறையான கணக்காய்வு மற்றும் இறுதிக் கணக்குகளை கணக்காய்வு செய்தல் என்பன அதன் பதவியினரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திணைக்களத்தின் உள்ளககணக்காய்வு நடவடிக்கைகள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்படுகின்ற கணக்காய்வு வினாக்களுக்களுக்கான விடைகள் உணவுத் திணைக்களத்திலுள்ள அலுவலகத்தினால் அமைச்சுக்கான பிரதிகளுடன் உரிய தரப்புக்களுக்கு நேரடியாகவே அனுப்பி வைக்கப்படுகின்றன.

அதற்கிணங்க, 2014 டிசம்பர் 31 வரையில் 15 கணக்காய்வு தொடர்பான வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 13 வினாக்களுக்கு திணைக்களம் பதிலளித்துள்ளது.

- **ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உணவுத் திணைக்களத்தினால் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்று நடைபெற்றது.

## (07) நீதிமன்ற நடவடிக்கைகள்

2014 ஆம்ஆண்டின் இறுதிவரையில் உணவு திணைக்களத்தினால் மாவட்ட நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விபரம் பின்வருமாறு.

| # | வழக்கு வகை | சட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| I. | மறுக்கப்பட்ட காசோலைகளுக்கான பணத்தினை அளவீடு செய்வதற்காக | 02 |
| II. | களஞ்சிய வாடகை நிலுவையினை அறவீடு செய்வதற்காக | 04 |
| III. | களஞ்சிய உரிமையினைப் பெறுதல் | 01 |
| IV. | நட்டங்களினை அறவீடு செய்வதற்கு | 05 |
| V. | திருகோணமலை தானியகம வீடுகளை மீளப் பெறுவதற்கான வழக்குகள் | 09 |
| **மொத்தம்** | | **21** |

- நட்டஈடு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கான ஒருகொடவத்தை இல.10, 14 மற்றும் 16 என்பன இல. DMR/01815 இன் கீழ் ட்ரயலில் இருந்துள்ளது. நிறைவேற்கையின் பின்னர் ரூபா. 1,028,500.00 தொகையினை மீள அறவீடு செய்யுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறான நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லையெனத் பிசுக்கால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- வெலிசறை களஞ்சிய இல. 05 இற்கான ரூபா. 910,602.91 நிலுவைத் தொகையிலிருந்து ரூபா.250,000.00 மற்றும் ரூபா. 50,000.00 இன் இரண்டு தவணைக் கட்டணங்களும் செலுத்தப்பட்டுள்ளன. குறித்த நிலுவைத் தொகையானது எதிர்காலத்தில் ஒழுங்கு முறையில் செலுத்தப்படுமென உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தினால் 18 தவணைக்கட்டணங்களில் மாத்தறை மெதவத்தை, பதுளை மற்றும் நாரஹென்பிட்டி களஞ்சியங்களுக்கான வாடகை நிலுவைத் தொகையான ரூபா.3,340,715.06 இனைச் செலுத்துவதற்கு உடன்படுமாறு DMR/03128/08 ஆம் இல. வழக்கிற்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- வெயாங்கொடை 11 ஆம் இல.களஞ்சியத்தினை வாடகைக்கு எடுத்திருந்த டொன் மயோன் (தனியார்) லிமிட்டட்டுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இலக்கம் இல. DMR/03546/10 தொடர்பில் வாடகை நிலுவையான ரூபா 2,500,000.00 இனை குற்றஞ் சாட்டப்பட்டவர் செலுத்தியுள்ளதுடன் வழக்கும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.
- திருகோணமலை தானியகமவிலுள்ள 34 வீடுகளின் உரிமையினை திணைக்களத்திற்கு வழங்குமாறு 2014 இல் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், தரணியகம வீடமைப்புத் தொகுதியிலுள்ள 182 வீடுகளை பிரிமா நிறுவன ஊழியர்களுக்கு வழங்கும் முகமாக உடன்படிக்கையொன்று 2014 இல் மேற்கொள்ளப்பட்டது.

## (08 ) திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்களும் வீடுகளும்

### ■ திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்கள்:

22 மாவட்டங்களிலுள்ள உணவு திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்களின் எண்ணிக்கை 114 ஆகும். அரச சொத்துக்களை முறையாக முகாமை செய்யும் நோக்கில் அத்தகைய சொத்துக்கள் பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| # | களஞ்சியம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டவை | 49 |
| 2. | வாடகையின்றி அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டவை | 35 |
| 3. | உணவுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுபவை | 17 |
| 4. | மாவட்ட செயலாளர்/பிரதேச செயலாளர் பொறுப்பிலுள்ளவை | 13 |
| | **மொத்தம்** | **114** |

### ■ திணைக்களத்திற்கு சொந்தமான வீடுகள்:

உணவுதிணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் திருகோணமலை, சீனன்குடா தானியகமவில் 366 வீடுகள் உள்ளன. அந்த வீடுகள் பின்வரும் முறையில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

| # | 2014.12.31 **ஆம் திகதியிலுள்ளவாறு** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| **1.** | உணவு திணைக்கள அலுவலக வளவுகள் | 01 |
| **2.** | சுற்றுலா விடுதி | 01 |
| **3.** | விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளவை | 08 |
| **4.** | **வாடகைக்கு விடப்பட்டவை** | |
| • | பிறிமா லிமிட்டட் ஊழியர்களுக்கு | 182 |
| • | தனியார் நிறுவனங்களுக்கு | 01 |
| • | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு | 81 |
| • | முப்படை மற்றும் பொலிசுக்கு | 44 |
| • | அரை அரசாங்க நிறுவனங்களுக்கு | 48 |
| **மொத்தம்** | | **366** |

## ❖ உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களின் விபரம்

2014.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான திணைக்களத்தின் நட்டங்கள் மற்றும் வாடகைக்கு அல்லது வாடகையல்லாமல் வழங்கப்பட்டுள்ள திணைக்களங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு மெ.தொ. | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | | | |
| 01 | ஒருகொடவத்தை - 01 | 24624 | 6000 | இலங்கைச் சுங்கம் |
| 02 | ஒருகொடவத்தை - 02 | 24624 | 6000 | புனர்வாழ்வு அமைச்சு |
| 03 | ஒருகொடவத்தை - 03 | 20304 | 5000 | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| 04 | ஒருகொடவத்தை - 04 | 19008 | 5000 | புனர்வாழ்வு அமைச்சு |
| 05 | ஒருகொடவத்தை - 05 | 19008 | 4500 | அயிகோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் |
| 06 | ஒருகொடவத்தை - 06 | 20304 | 5000 | கல்வி அமைச்சு |
| 07 | ஒருகொடவத்தை - 07 | 20304 | 5000 | இடர் நிவாரண திணைக்களம் |
| 08 | ஒருகொடவத்தை - 08 | 16560 | 4000 | கல்வி அமைச்சு |
| 09 | ஒருகொடவத்தை - 09 | 16560 | 4000 | புனர்வாழ்வு அமைச்சு |
| 10 | ஒருகொடவத்தை - 12 | 18183 | 4000 | இலங்கைச் சுங்கம் |
| 11 | ஒருகொடவத்தை - 10 | 13436 | - | ராங் கொன்ரைனர்ஸ் (தனியார்) லிமிட்டட் |
| 12 | ஒருகொடவத்தை - 14 | 11448 | - | |
| 13 | ஒருகொடவத்தை - 15 | 18206 | - | |
| 14 | ஒருகொடவத்தை - 16 | | - | |
| 15 | அலுவலக கட்டிடம் | - | - | |
| 16 | ஹூணுப்பிட்டி அலுவலக அறை | 755 | - | திருமதி.சுனித்தா குணசிங்க |
| 17 | இரத்மலானை 03 | 41200 | 7520 | செஞ்சிலுவை சங்கம் |
| **மொத்தம்** | | **284524** | **56020** | |

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு மெ.தொ | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| கம்பஹா மாவட்டம் | | | | |
| 18 | வெயாங்கொடை - 01 | 29040 | 5900 | லங்கா சதொச |
| 19 | வெயாங்கொடை - 02 | 21750 | 4000 | எபிள் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி |
| 20 | வெயாங்கொடை - 03 | 6142 | 1200 | உணவுத் திணைக்களம் |
| 21 | வெயாங்கொடை - 04 | 7552 | 900 | பண்டார இன்டஸ்ரியல் சேர்விஸஸ் |
| 22 | வெயாங்கொடை - 05 | 12373 | 1400 | பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் |
| 23 | வெயாங்கொடை - 06 | 7568 | 1100 | உணவுத் திணைக்களம் |
| 24 | வெயாங்கொடை - 07 | 28860 | 5400 | |
| 25 | வெயாங்கொடை - 08 | 28860 | 5400 | லங்கா சதொச |
| 26 | வெயாங்கொடை - 09 | 28860 | 5400 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் |
| 27 | வெயாங்கொடை - 10 | 28860 | 5400 | லங்கா சதொச |
| 28 | வெயாங்கொடை - 11 | 33200 | 6200 | தொன் மயோன் நிறுவனம் |
| 29 | வெயாங்கொடை - 13 | 24288 | 6800 | லங்கா சதொச |
| 30 | வெயாங்கொடை - 16 | 6370 | 1200 | லங்கா சதொச |
| 31 | வெயாங்கொடை - 17 | 6279 | 770 | பொறியியல் வேலைகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகம் |
| | **மொத்தம்** | **270002** | **51070** | |
| குருநாகல் மாவட்டம் | | | | |
| 32 | நிக்கவரட்டிய களஞ்சியம் | 10496 | 4000 | பி.செ.(நிக்கவரட்டிய) |
| 33 | அஸ்வத்தம களஞ்சியம் | 6132 | - | வட மேல் மாகாண சபை |
| 34 | மஹவ இல. - 01 | 4698 | 800 | உணவுத் திணைக்களம் |
| 35 | மஹவ இல. - 02 | 13118 | 1300 | |
| 36 | மல்கடுவாவ இல. - 01 | 5227 | 2000 | சயிட் மொஹமட் நிறுவனம் |
| 37 | மல்கடுவாவ இல. - 02 | 4827 | 2000 | |
| 38 | மல்கடுவாவ இல. - 03 (GI) களஞ்சியம் | 10498 | 2000 | நிக்கரட்டிய கிறீன் வலே பிளான்டேஷன் லிமிட்டட் |
| 39 | கட்டுவான இல - 01 | 6336 | 2000 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 40 | கட்டுவான இல - 02 | 5544 | 2000 | செலின் எக்ஸ்போட்ஸ் லிமிட்டட் |
| 41 | கட்டுவான இல - 03 | 5544 | 2000 | கூ.மொ.தா |
| 42 | கட்டுவான இல - 04 | 5544 | 2000 | |
| | **மொத்தம்** | **77964** | **36200** | |


| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளவு மெ.தொ. | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | |
| 43 | பள்ளேகல | 15484 | 1500 | எச்.எம்.எஸ்.தர்மசேன |
| 44 | கட்டுகஸ்தோட்டை களஞ்சியம் | 6490 | 1700 | டிரேன்ட்ஸ் மார்கற்றிங் |
| 45 | வத்தேகம களஞ்சியம் | 5120 | 1000 | உணவுத் திணைக்களம் |
| | **மொத்தம்** | **27094** | **4200** | |
| **கேகாலை மாவட்டம்** | | | | |
| 46 | கேகாலை—பரகம்மன 01 | 5500 | 1500 | விஜித குரூப் கம்பனி லிமிட்டட் |
| 47 | கேகாலை—பரகம்மன 02 | 5500 | 1500 | |
| 48 | கேகாலை—பரகம்மன 03 | 3960 | - | |
| | **மொத்தம்** | **14960** | **3000** | |
| **காலி மாவட்டம்** | | | | |
| 49 | பூசா இல. - 02 | 23721 | 3750 | உணவுத் திணைக்களம் / ஒரு பகுதி லங்கா சதொசவிற்கு |
| 50 | பூசா இல. - 03 | 23721 | 3750 | உணவுத் திணைக்களம் |
| 51 | பூசா இல. - 04 | 56784 | | பொருளாதார நிலையம் |
| 52 | பூசா இல. - 05 | 55770 | | |
| 53 | கட்டுகொட இல. - 01 | 20545 | 3825 | றைனோ மெறிரைம் |
| 54 | கட்டுகொட இல. - 02 | 9532 | 1775 | |
| | **மொத்தம்** | **190073** | **13100** | |
| **மாத்தறை மாவட்டம்** | | | | |
| 55 | மதவத்தை இல - 01 | 7264 | 965 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 56 | மதவத்தை இல - 02 | 10000 | 1870 | உணவுத் திணைக்களம் |
| 57 | வெலிகம களஞ்சியம் | 8019 | 1300 | பியசிறி ஸ்ரோர்ஸ் |
| | **மொத்தம்** | **25283** | **4135** | |
| **ஹம்பாந்தோட்டை மாவட்டம்** | | | | |
| 58 | ஹம்பாந்தோட்டை களஞ்சியம் | 14023 | 4500 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 59 | வீரவில இல. - 01 | 5478 | 1700 | பி.செ. (ஹம்பாந்தோட்டை) |
| 60 | வீரவில இல. - 02 | 4157 | 1100 | |
| 61 | வீரவில இல. - 03 | 4221 | 1700 | |
| 62 | கஹதாவ இல - 01 | 3517 | 1900 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 63 | கஹதாவ இல - 02 | 4090 | 1900 | |
| | **மொத்தம்** | **35486** | **12800** | |

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு மெ.தொ. | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |
| **அநுராதபுர மாவட்டம்** | | | | |
| 64 | சிறாவஸ்திபுர இல - 01 | 25520 | 3575 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 65 | சிறாவஸ்திபுர இல - 02 | 23930 | 3350 | |
| 66 | கெகிறாவ இல - 01 | 7950 | 1275 | |
| 67 | கெகிறாவ இல - 02 | 7150 | 1145 | |
| 68 | சேனாநாயக்க இல - 01 | 2461 | 390 | வ/ப மக்கள் ஐக்கிய விவசாயிகள் சங்கம் |
| 69 | சேனாநாயக்க இல - 02 | 2461 | 396 | சுதேச மருத்துவ அமைச்சு |
| 70 | சேனாநாயக்க இல - 03 | 11017 | 2400 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 71 | சேனாநாயக்க இல - 04 | 2185 | 325 | வ/ப மக்கள் ஐக்கிய விவசாயிகள் சங்கம் |
| | **மொத்தம்** | **82674** | **12856** | |
| **பொலநறுவை மாவட்டம்** | | | | |
| 72 | கந்துருவெல இல - 01 | 13419 | 2880 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 73 | கந்துருவெல இல - 02 | 20187 | 3200 | |
| 74 | ஹிங்குராகொட இல - 01 | 23550 | 4400 | கூ.மொ.தா. |
| 75 | ஹிங்குராகொட இல - 02 | 23550 | 4400 | |
| | **மொத்தம்** | **80706** | **14880** | |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | |
| 76 | பிளக்புல் இல. - 01 | 1514 | 280 | நுவரெலிய கமத்தொழில் கூட்டுறவு சங்கம் |
| 77 | பிளக்புல் இல. - 02 | 1836 | 150 | |
| 78 | பிளக்புல் இல. - 02 மேல் மாடி | 1824 | - | |
| 79 | பிளக்புல் இல. - 03 | 2335 | 435 | |
| | **மொத்தம்** | **7509** | **865** | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | | | |
| 80 | இரத்தினபுரி களஞ்சியம் | 9611 | 1800 | வ/ப பம்பரமொட்டுவ ப.நோ.கூ.ச மற்றும் லங்கா சதொச நிறுவனம் |
| 81 | ஒபநாயக்க இல - 01 | 7730 | 1335 | லால் ஸ்ரோர்ஸ் |
| 82 | ஒபநாயக்க இல - 02 | 5300 | 850 | மின்சார சபை |
| 83 | அஹலியகொட இல - 01 | 2337 | 435 | எஹலியகொட பல நோக்கு கூட்டுறவு சங்கம். |
| 84 | அஹலியகொட இல - 02 | 2373 | 435 | |
| 85 | அஹலியகொட இல - 03 | 4806 | 900 | |
| 86 | கஹவத்தை இல. - 01 | 3180 | 590 | எஹலியகொட பல நோக்கு கூட்டுறவு சங்கம். |
| 87 | கஹவத்தை இல. - 02 | 1881 | 150 | |
| | **மொத்தம்** | **37218** | **6495** | |

| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு மெ.தொ. | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |
| **மொனராகலை மாவட்டம்** | | | | |
| 88 | மொனராகலை இல. 01 | 22480 | 3150 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| 89 | மொனராகலை இல. 02 | 7000 | 1250 | கூ.மொ.தா. |
| | **மொத்தம்** | **29480** | **4400** | |
| **மாத்தளை மாவட்டம்** | | | | |
| 90 | மாத்தளை இல. - 01 | 21448 | 3000 | திரு.மொஹமட் அஷ்ரப் |
| | **மொத்தம்** | **21448** | **3000** | |
| **பதுளை மாவட்டம்** | | | | |
| 91 | பதுளை இல -01 | 7245 | 1380 | உணவுத் திணைக்களம் |
| 92 | பதுளை இல -02 | 6781 | 1500 | மின்சார சபை |
| 93 | ஹப்புத்தளை இல. - 01 | 1653 | 130 | ஹப்புத்தளே ப.நோ.கூ.ச |
| 94 | ஹப்புத்தளை இல. - 02 | 1806 | 120 | |
| | **மொத்தம்** | **17485** | **3130** | |
| **அம்பாறை மாவட்டம்** | | | | |
| 95 | அம்பாறை இல. - 01 | 113680 | 2125 | உணவுத் திணைக்களம் |
| 96 | அம்பாறை இல. - 02 | 11368 | 2125 | நெல் சந்தைப்படுத்தல் சபை |
| | **மொத்தம்** | **22736** | **4250** | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | | | |
| 97 | மட்டக்களப்பு இல - 01 | 18000 | 6000 | பிரான்டிக்ஸ் நிறுவனம் |
| 98 | மட்டக்களப்பு இல - 02 | 17600 | 6000 | மாவட்ட செயலாளர் |
| 99 | மட்டக்களப்பு இல - 03 | 17600 | 6000 | பிரான்டிக்ஸ் நிறுவனம் |
| 100 | மட்டக்களப்பு இல - 04 (புகையிரத நிலையத்திற்கருகிலுள்ள களஞ்சியம்) | 13560 | 2800 | கூ.மொ.தா./மா.செ. (மட்டக்களப்பு) |
| | **மொத்தம்** | **66760** | **20800** | |


| தொடர் இலக்கம் | களஞ்சியத்தின் பெயர் | சதுர அடி அளவு | கொள்ளளவு மெ.தொ. | வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |
| **புத்தளம் மாவட்டம்** | | | | |
| 101 | புத்தளம் இல - 01 | 5600 | 600 | மாவட்ட செயலாளர் (புத்தளம்) |
| 102 | புத்தளம் இல - 02 | 9600 | 1000 | |
| | **மொத்தம்** | **15200** | **1600** | |
| **வவுனியா மாவட்டம்** | | | | |
| 103 | வவுனியா இல. - 01 | 3763 | 775 | கூ.மொ.தா. |
| 104 | வவுனியா இல. - 02 | 4165 | 165 | மாவட்ட செயலாளர் (வவுனியா) |
| 105 | வவுனியா இல. - 03 | 684 | 160 | |
| | **மொத்தம்** | **8612** | **1100** | |
| **திருகோணமலை மாவட்டம்** | | | | |
| 106-110 | லவ் லேன் (களஞ்சியம் 5) | 28518 | 15000 | களஞ்சியம் 3 - வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,களஞ்சியம் 2 - இலங்கை முதலீட்டு சபை |
| | **மொத்தம்** | **28518** | **15000** | |
| **யாழ் மாவட்டம்** | | | | |
| 111-113 | நாவற்குழி (களஞ்சியம் 3) | 43200 | 7500 | மாவட்ட செயலாளர்(யாழ்ப்பாணம்) |
| | **மொத்தம்** | **43200** | **7500** | |
| **மன்னார் மாவட்டம்** | | | | |
| 114 | முருங்கன் | 9720 | 1500 | உலக உணவுத்திட்டதிற்கு வழங்கப்பட்டுள்ளது. |
| | **மொத்தம்** | **9720** | **1500** | |

## இலங்கையில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்கள் வியாபித்துள்ள இடங்கள்




❖ **களஞ்சிய வருமானம்**

| வருடம் | கிடைக்க வேண்டிய வருமானம் | கிடைத்த வருமானம் |
|---|---|---|
| **2013** | 68,307,972.00 | 56,026,609.36 |
| **2014** | 80,000,000.00 | 73,072,795.86 |




❖ **வீடுகள் மூலமான வருமானம்**

| வருடம் | கிடைக்க வேண்டிய வருமானம் | கிடைத்த வருமானம் |
|---|---|---|
| **2013** | 5,181,325.00 | 4,372,845.00 |
| **2014** | 5,245,380.00 | 4,978,211.20 |



# (09). கணக்கீட்டு நடைமுறையின் பொழிப்பு

உணவுத் திணைக்களத்தின் ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் செயல்திட்டம் என்பன அரசாங்கத்தின் கொள்கையான உணவுப் பாதுகாப்பினை அமுல்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி உயர் தரத்திலான பாதுகாப்பு இருப்பு மட்டத்தினை பேணுவதற்காக தற்போதிருக்கும் பண்டகசாலைகளின் சௌகரியத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீடு இதனை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வருடாந்த மதிப்பீடானது திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த சில நோக்கங்களுக்காக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேலும், தேவையான இலக்குகளை அடைவதற்கான ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக செலவின கட்டுப்பாட்டு திட்டமிடல்கள் அமுல்படுத்தப்பட்டன. வருட ஆரம்பத்தில் நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கும் மேலான திணைக்களத்தின் தேவைகள் நி.பி.66 மாற்றல்களின் நியதிகளின்படி நிறைவு செய்யப்பட்டன.

## மீண்டுவரும் செலவினம்

2014 இல் ஆகக்குறைந்த நிருவாக செலவின கொள்கை அமுல்படுத்தப்பட்ட போதிலும் வருடாந்த மதிப்பீட்டின் மூலமான மீண்டுவரும் செலவினத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சுவதற்கான வழியாக அமைந்திருந்ததுடன் செலவின கட்டுப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட மிகைகள் நி.பி.66 இன்படி அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் தேவையான விடயங்களுக்கு மாற்றப்பட்டன.

திணைக்களமானது ஏற்பாடுகளின் எல்லைகளை விஞ்சாமல் கணக்கீட்டு விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைவாகவும் செயற்பட்டதன் காரணமாக இடர்களிலிருந்நது விடுபட்டு இருந்ததுடன் தேவையான விரிவாக்கல்களுக்கான எற்பாடுகளை மீளாய்வு செய்வதற்கான ஆற்றலையும் கொண்டிருக்கின்றது.

## மூலதன செலவினம்

மூலதன விடயம் தொடர்பில் வருடாந்த மதிப்பீடுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்பாடுகள் உச்சளவில் பயன்படுத்தப்பட்டன.

அரிசிக் கொள்வனவுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது தீர்மானிக்கப்பட்டவாறான அரிசி இருப்பினைக் கொள்ளவனவு செய்வதற்கேற்ப களஞ்சிய வசதிகள் இன்மையினால் முழுமையாகப் பயன்படுத்தப்பட முடியவில்லை.

## கணக்குகளை மூடுதல்

உணவு திணைக்களத்தின் மூடப்பட்ட கணக்குகளில் ஒன்றான சமயலறை மற்றும் பேக்கரி முற்பணக் கணக்கின் தொழிற்படு நட்டங்களை பதிவளிப்பு செய்வதற்கான அங்கீகாரத்தினை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டியிருந்துடன் அங்கீகாரம் மற்றும் ஏற்பாடுகளைப் பெற்றதன் பின்னர் கணக்கானது 2015 இல் உடனடியாக மூடப்பட முடியும்.

உணவு விநியோக முற்பணக் கணக்கு போன்ற ஏனைய கலைப்புச் செய்யப்படுகின்ற கணக்குகளில் அத்தகைய சொத்துக்கள் உணவுத் திணைக்களத்தின் தொழிற்பாட்டுக்கென பயன்படுத்தப்படுவதால் அது தொடர்பில் சில பிரச்சனைகள் எழுகின்றன. ஆகையால் அத்தகைய கணக்குகளை மூடுவதற்கு சாத்தியம் குறைவாகவே காணப்படுகின்றது. கடன்பட்டோரின் எஞ்சிய மீதியினையும்பெற்றுக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின் படியான தொழிற்படு நட்டத்தினையும் பதிவளிப்பு செய்வதற்கான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நிறைவு

உணவு திணைக்களமானது அரசாங்க கொள்கையினைக் கருத்தில் கொண்டு தேவை கருதி விசேடமாக சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறித்த ஆண்டுக்கான கணக்கீட்டு நடைமுறைகள் மிகுந்த அர்ப்பணிப்புடனும் வெளிப்படையாகவும் நடைமுறைக்கு சாத்தியமான வழிமுறைகளில் அனைத்து சட்ட ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி குறைபாடுகள் எதுவுமின்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.



ஐ.பீ.கொத்தலாவலை

கணக்காளர்,

உணவு ஆணையாளர் திணைக்களம்

## (10) ஆதனங்களும் சொத்துக்களும்

உணவு திணைக்களத்தின் சொத்துக்கள் முற்பணக் கணக்கின் கீழ் உணவு விநியோகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களாக இன்னமும் காட்டப்பட்டு வருகின்றன. முழுச் சொத்துக்களும் 2014.12.31 வரையில் திணைக்களத்தின் தொழிற்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, 2014.12.31 ஆம் திகதிய திணைக்களத்தின் சொத்துப் பெறுமதி மதிப்பாய்வு பின்வருமாறு.

| # | சொத்து | புரள்வு 2014.12.31 ஆம் திகதியன்று |
|---|---|---|
| **I.<br>உணவு விநியோக முற்பணக் கணக்கின் கீழ் உள்ளடங்கும் சொத்துக்கள்** | | |
| | கட்டிடங்களும் நிருமாணங்களும் | 121,065,254.11 |
| | வாகனம் | 15,016,458.27 |
| | இயந்திரங்களும் உபகரணங்களும் | 9,215,359.14 |
| | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 22,962,954.35 |
| | **மொத்த தொகை** | **168,260,025.87** |

# (11). வருமானங்களும் அறவீடுகளும்

## ■ வருமானம்

| # | 2014.01.01 இலுள்ளவாறான கடன் மீதி | ரூபா |
|---|---|---|
| I. | களஞ்சிய வாடகை | 69,765,510.86 |
| II. | வீட்டு வாடகை | 3,047,337.50 |
| **மொத்தம்** | | **72,812,848.36** |

| # | வருடத்தினுள் சேகரிக்கப்பட்ட வருமானம் | ரூபா |
|---|---|---|
| I. | களஞ்சிய வாடகை | 73,072,795.86 |
| II. | வீட்டு வாடகை | 4,978,211.20 |
| **மொத்தம்** | | **78,051,007.06** |

| # | 2014.12.31 இலுள்ளவாறான கடன் வருமதி மீதி | ரூபா |
|---|---|---|
| I. | களஞ்சிய வாடகை | 77,054,071.25 |
| II. | வீட்டு வாடகை | 3,013,378.00 |
| **மொத்தம்** | | **80,067,449.25** |

## ■ அறவீடு

### ❖ கூட்டுறவு கடன் மீதி

| | |
|---|---|
| 2014.01.01 இல் கூட்டுறவுத் துறையிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டிய அறவீடுகள் | ரூபா. 200,061,967.97 |
| குறித்த வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் | ரூபா.295,554.26 |
| **2014.12.31 இலுள்ளவாறான கடன் நிலுவை மீதி** | ரூபா.199,766,413.71 |

### ❖ மிகை கட்டண மீதி

| | |
|---|---|
| 2014.01.01 இல் கூட்டுறவுத் துறையிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டிய அறவீடுகள் | **ரூபா 49,533,791.68** |
| 2014 இல் மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் | ரூபா. - |
| குறித்த வருடத்தில் அறவிடப்பட்ட மிகை கட்டணம் | ரூபா.79,693.05 |
| 2014.12.31 இல் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி | ரூபா.49,477,098.63 |

# (12) நிதி அறிக்கைகள்

| | | |
|---|---|---|
| தலைப்பு இல | : | 300 |
| அமைச்சு / திணைக்களம் | : | உணவு ஆணையாளர் திணைக்களம் |
| நிகழ்ச்சித்திட்ட இல. | : | 01 |
| கருத்திட்டம் | : | 01 |

மீண்டுவரும் செலவினம்

| விபரணம் | **2013 உண்மைச் செலவினம் ரூபா** | **2014 அங்கீகரித்த மதிப்பீடு ரூபா.** | **2014 அங்கீகரித்த மதிப்பீடு ரூபா.** | **2014 திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா.** | **2014 உண்மைச் செலவினம் ரூபா.** |
|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 42,038,548.00 | 46,275,000.00 | 42,575,000.00 | 42,482,259.00 | 92,741.00 |
| ஏனையவை | 146,030,728.00 | 30,482,000.00 | 109,265,000.00 | 108,276,346.00 | 988,654.00 |
| **மொத்தம்** | **188,069,276.00** | **76,757,000.00** | **151,840,000.00** | **150,758,605.00** | **1,081,395.00** |

*மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு இருப்பு முறைமையினை விருத்தி செய்தல்*

| **மூலதன செலவு** விடயம் | விபரங்கள் | **2013** உண்மைச் செலவினம் ரூபா. | **2014** அங்கீகரித்த மதிப்பீடு ரூபா. | **2014** திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | **2014** உண்மைச் செலவினம் ரூபா. | **2014** மீதி ரூபா |
|---|---|---|---|---|---|---|
| **மூலதன நிதி மூல புனரமைப்பும் அபிவிருத்தியும்.** | | | | | | |
| 2001 | கட்டிடமும் நிருமாணமும் | 16,414,187.00 | 10,000,000.00 | 14,310,000.00 | 14,290,936.00 | 19,064.00 |
| 2002 | இயந்திரங்களும் உபகரணங்களும் | 532,680.00 | 300,000.00 | 462,000.00 | 461,493.00 | 507.00 |
| 2003 | வாகனம் | 901,835.00 | 800,000.00 | 1,060,000.00 | 1,049,240.00 | 10,760.00 |
| | மூலவள உட்பாய்ச்சல் | | | | | |
| 2101 | வாகனம் | | | | | |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 653,057.00 | 400,000.00 | 885,000.00 | 883,973.00 | 1,027.00 |
| 2103 | இயந்திரங்களும் உபகரணங்களும் | 235,000.00 | 200,000.00 | 200,000.00 | 16,160.00 | 183,840.00 |
| 2401 | பயிற்சியும் திறன்விருத்தியும் | 124,500.00 | 258,000.00 | 268,000.00 | 262,700.00 | 5,300.00 |
| 2502 | உணவுத் திணைக்கள களஞ்சிய திருத்தம் | | 10,000,000.00 | 5,690,000.00 | - | 5,690,000.00 |
| | **மொத்தம்** | **18,861,259.00** | **21,958,000.00** | **22,875,100.00** | **16,964,502.00** | **5,910,498.00** |

| **மூலதன பாய்ச்சல்** | | **2013** உண்மைச் செலவினம் ரூபா. | **2014** அங்கீகரித்த மதிப்பீடு ரூபா. | **2014** திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா. | **2014** உண்மைச் செலவினம் ரூபா. | **2014** மீதி ரூபா |
|---|---|---|---|---|---|---|
| **நிகழ்ச்சித் திட்டம்** | **விபரணம்** | | | | | |
| 01. | திரட்டு நிதியம் | 253,279,000 | 98,715,000 | 174,715,000 | 167,723,107 | 6,991,893 |
| 07. | ஒதுக்கீட்டுச் சட்டம் | | | | | |
| | விசேட சட்ட சேவைகள் | | | | | |
| | வெளிநாட்டு உதவி | | | | | |
| | கடன்கள் | | | | | |
| | உதவிகள் | | | | | |
| | எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டுதவி | | | | | |
| | கடன் | | | | | |
| | உதவி | | | | | |
| | | | | | | |
| | வெளிநாட்டு உதவி | | | | | |
| **01+07** | **மொத்த செலவினம்** | 253,279,000 | 98,715,000 | 174,715,000 | 167,723,107 | 6,991,893 |

# (13) செயற்பாடுகளும் முன்னேற்றமும்

## ▪ வருமானத்தினை மேம்படுத்துதல்

1. திணைக்களத்தினால் பேணப்படாத திணைக்களத்தின் களஞ்சியங்களை வாடகை/ குத்தகைக்கு வழங்குதல் மற்றும் தானியகம பிறிமா வீடுகளை வாடகைக்கு வழங்குதல் என்பன பிரதான வருமானமீட்டும் மூலங்களாக விளங்குக்கின்றன. உடன்படிக்கைகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக வாடகையினை மீளாய்வு செய்வதற்கும் புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
2. திணைக்களமானது, களஞ்சிய வருமானங்களிலிருந்து அரசாங்க வருமானத்திற்கு ரூபா 73,072,795.86/- இனையும் அரச வருமானத்திலிருந்து ரூபா 4,978,211.20 இனையும் அரசாங்க வருமானத்தினை மேம்படுத்துவதற்கு பங்களிப்பினை வழங்கியுள்ளது.
3. திணைக்களமானது இரண்டு முற்பணக் கணக்குகளைப் பேணி வருகின்றது. உணவு விநியோக முற்பணக் கணக்கின் உணவு முத்திரை முறைமையின் கீழ் உணவு விநியோகத்திற்காக கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கான தொகையின் ரூபா 295,554.26 யினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
4. திணைக்களமானது, மேற்படி கணக்கின் வரவேண்டிய மிகைக்கட்டணமான ரூபா 76,693.05இனை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.
5. திணைக்களமானது, ஏனைய முற்பணக்கணக்கிலிருந்த சமயலறை மற்றும் பேக்கரிநட்டங்களின் மீதிகள் நீங்கலான சொத்துக்களும் பொறுப்புக்களும் மூடப்பட்டுள்ளதுடன் ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு உரிய மீதிகளைப் பதிவளிப்பு செய்வதற்கு 2014 இல் நடவடிக்கைகளினை எடுத்துள்ளது.

## ▪ தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பங்களிப்புக்கள்

1. 2014 ஆம் ஆண்டு குருநாகல் மாவட்டத்தில் இடம் பெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் உணவு ஆணையாளர் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி திணைக்கள கண்காட்சி சாவடியொன்று தாபிக்கப்பட்டது.